# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை), தருமபுரி

சுற்றறிக்கை எண் : 10/2021

ந.க.எண். 19678/91 வளர்ச்சி

நாள் : 22 .02.2021

## சுற்றறிக்கை

பொருள் : மத்திய வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் வழங்கப்பட்டு வரும் தனி நபர் தங்க நகைக்கடன்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை கிராம் ஒன்றுக்கு ரூ.3100/- அல்லது மார்க்கெட் மதிப்பில் 75 % -க்கு மிகாமல் வழங்க அறிவுறுத்துதல் - தொடர்பாக.

---------

தற்பொழுது தங்க நகைகளின் பேரில் வழங்கப்படும் கடன்களுக்கு தங்க நகைகளின் நிகர எடையில் கிராம் ஒன்றுக்கு ரூ.3300/-வீதம், தங்க நகை கடன் வழங்கப்பட்டு வருகிறது.

சமீப நாட்களாக, தங்கத்தின் சந்தை மதிப்பு குறைந்து வருவதால் இச்சூழலில், தங்க நகைகளின் பேரில், கிராம் 1-க்கு ரூ. 3100/- அல்லது சந்தை மதிப்பில் 75% இவை இரண்டில் எது குறைவோ அத்தொகையை நகை கடனாக வழங்க தெரிவிக்கப்படுகிறது. இதனை 24.02.2021-ந் தேதி முதல் நடைமுறைபடுத்தவும் தெரிவிக்கப்படுகிறது.

நகைக்கடன் வழங்கும் போது கல் நகைக்களுக்கு உரிய முறையில் கவனமாக கழிவு செய்து நிகர எடைக்கு மட்டும் கடன் வழங்க வேண்டும். கடன் நிலுவையில் இருக்கும் எந்த தேதியிலும், கடன் வழங்கப்பட்ட நகைகளின் நிகர எடைக்கான மொத்த நகை மதிப்பை விட, கடனுக்கான அசல் மற்றும் வட்டிக்கான கூட்டுத் தொகை மிகாமல் இருப்பதை கண்காணித்து வர வேண்டும்.

தங்கத்தின் மார்க்கெட் மதிப்பை தினசரி தமிழ் நாளிதழை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். பிரதி நாளில் நகைகடன் வழங்குவதற்கு முன்பு, அன்றைய தேதியில் தமிழ் நாளிதழில் வெளியிடப்படும், கிராம் 1-க்கு தங்கத்தின் சந்தை மதிப்பு விவரத்தை நகை கடன் பதிவேட்டில் ஒட்டி பராமரித்து, அதன் அடிப்படையில் மட்டுமே நகைகடன் வழங்கப்பட வேண்டும்.

தங்க நகை கடனுக்கான வட்டி விகிதம், கழிவு செய்ய வேண்டிய அளவு உள்ளிட்ட இதர கடன் வழங்கும் நடைமுறைகளில் எந்த மாற்றமும் இல்லை என அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்./-கி.ரேணுகா,
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்.

பெறுதல்,

1. தலைமையகம் மற்றும் அனைத்து கிளை மேலாளர்கள்,
2. அனைத்து தொ.வே.கூ.கடன் சங்கங்கள்
3. அனைத்து தலைமையகப் பிரிவு மேலாளர்கள் மற்றும் பிரிவு உதவியாளர்கள்,
4. மேலாளர் கணிணி, தலைமையகம் - தக்க நடவடிக்கைகாக.

நகல்,

1. துணைப்பதிவாளர், தருமபுரி / கிருஷ்ணகிரி /ஓசூர்.
2. இணைப்பதிவாளர், தருமபுரி மண்டலம் /கிருஷ்ணகிரி மண்டலம்,
3. இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், முதன்மை வருவாய் அலுவலர், பொது மேலாளர் மேசைக்கு.
4. கூட்டுறவு தணிக்கை துணை இயக்குநர், தலைமையகம்,

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, சென்னை.
2. பதிவாளர் அவர்கள், கூட்டுறவு சங்கங்களின் மாநில பதிவாளர் அலுவலகம், சென்னை.

/உண்மை நகல்/

22/02/2021

மேலாளர் (வளர்ச்சி)